மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 4/2024**

வா.சா. 3

2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள், 17 ம் நாள், வாதி தரப்பு 3 வது சாட்சியின் வாக்கு மூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.மூ.ராமநாதன்,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | ஆறுமுகம் | Caste | |
| Father / Husband's Name | கந்தையா | Calling | |
| Village | | Religion | |

தேதி: 17.06.2026

**<u>முதல் விசாரணை</u>**

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியமளிக்க நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி தயார் செய்தது நான் தான். அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**வாதி தரப்பு விசாரணை**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆவணத்தை எழுதியதும் கையெழுத்து செய்ததும் நான் தான் என்று சொன்னால் சரிதான். ஆவணத்தை எழுதுவதற்கு எனக்கு விபரங்கள் சொல்லியது யார் என்றால் பிச்சை என்பவர் சொன்ன தகவலின் அடிப்படையில் ஆவணம் தயார் செய்தேன். நான் எழுதிய ஆவணத்தை இரு தரப்பினர்களும் படித்துப் பார்த்த பின்னர் தான் கையெழுத்து செய்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு